

# ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 12 | காலாண்டிதழ் அக்டோபர் - டிசம்பர் 2018 | கதிர் - 4


# நவரசம் தரும் நவராத்ரி

## “அற்புத சுகம் அளிக்கும் ஆராதனை”



நவரச நாயகி ஸ்ரீ சக்ரேஸ்வரி ஸ்ரீ சக்ர நாயகி ஸ்ரீ லலிதாம்பிகையின் அருளாட்சி நமது மாடம்பாக்கத்தை சக்தி பீடம் மையமாக கொண்டு நடைபெற்று வருகிறது. உலக மகா மாபெரும் சக்தியாக, ஒரே சக்தியாக, பராசக்தியாக, ஆதிபராசக்தியாக, அகில உலக அண்டங்களுக்கு எல்லாம் சக்தியாக என் அன்னை பஞ்ச சக்திகளுடன் அஷ்டமாசக்திகள் உடனிருக்க இங்கே இயங்கி கொண்டு இருக்கிறாள். இங்கே கேட்டது கிடைக்கும் நினைத்தது நிறைவேறும்.

இவ்வருடம் நவராத்திரி திருவிழா அக்டோபர் மாதம் 10ம் தேதி முதல் தொடங்கி அக்டோபர் மாதம் 18ம் தேதி வரை நமது சக்திபீடத்தில் விமரிசையாக நடைபெற உள்ளது. ஒவ்வொரு நாளும் அம்பிகை ஒவ்வொரு திருக்கோலத்தில் காட்சி தந்து அருள் புரிவாள். ஒன்பது நாளும் திருநாளாகவே இருக்கபோகிறது. காலையில் அடியேனது நவாவரண பூஜையும், மாலையில் விசேஷ அர்ச்சனையும் நடைபெறும். ஒரு பூ அம்பிகைக்கு போட்டாலே ஆத்மாவிற்கு கோடி புண்ணியம் உண்டு. ஒருநாள் அலங்காரத் திற்கு பங்கேற்றாலோ கோடி கோடி புண்ணியம் உண்டு. விசேஷ சண்டி ஹோமம் அக்டோபர் மாதம் 14ம் தேதி அன்று நடைபெற உள்ளது. சிறப்பாக நடைபெறும் இப்பூஜையில் பங்கேற்று அன்பர்கள் அனைவரும் பெரும் பயனடைய வேண்டுகிறேன்.

ஆராதனை திருவிழா நமது சக்திபீடத்தில் டிசம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆகிய இரண்டு நாட்கள் வெகு விமர்சையாக நடைபெற உள்ளது. குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் இல்லை என்று சொன்னால் மாடம்பாக்கம் சக்தி பீடமே கிடையாது. உடல் பொருள் ஆவி ஆக அடியேனை இயக்கி உலக மகா சக்தி பீடமாக சித்தர் கோயிலை அமைத்த பெருமை ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளையே சேரும். எல்லாம் அவர் செயல். கருணை பார்வை கொண்ட கற்பக விருட்சம் அவர். நினைத்ததை வாரி வழங்கும் காமதேனுவும் அவர். அள்ளி அள்ளி வழங்கும் அமுதசுரபியும் அவர். தாயாய் தந்தையாய் அனைத்துமாய் இருந்து அரவணைத்து காக்கும் தெய்வமும் அவர். இப்படி எல்லாமாகவும் இயங்கும் ஸத்குருவிற்கு மகா ஆராதனை நடைபெற உள்ளது. விசேஷ ஹோமங்கள் தேவியின் திருகல்யாணம், வேத பாராயணம், அன்னதானம் இவைகள் சிறப்பாக நடைபெற உள்ளன. குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு, பராபரகுரு என்று குரு மண்டலத்தில் இருக்கும் குருமார்களை அந்தணர்கள் உடம்பில் வரவழைத்து அவர்களது திருபாதங்களை பூஜை செய்து பாதாபிஷேகம் செய்து, அந்த தீர்த்த துளிகளை கும்பத்தில் சேகரித்து தீர்த்த நாராயண பூஜை செய்வதுதான் மகா ஆராதனை. அந்த அற்புத காட்சி காண்பது அற்புத சுகம் அளிக்கும். காலமெல்லாம் பட்ட கஷ்டம் நொடி பொழுதில் கரைந்து போகும். கலங்கிய மனதிற்கு கண்காணாத காட்சி கிடைக்கும். ஆகையால் அன்பர்கள் அனைவரும் வாய்ப்பினை நழுவ விடாமல் பயன்படுத்தி கொண்டு இரண்டு விழாவிலும் பங்கேற்று அருளாசிகளை பெற ஆசீர்வதிக் கிறேன்.

**குருஜி சர்மா**


**ஸ்ரீ சேஷஒளியில் சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்**

சந்தா ரூ. 101/-

# சூட்சும குருவும் ஸ்தூல குருவும்

*கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும் வந்தே பிரம்மீபூதம் தபோநிதம்*

பெருமதிப்பிற்குரிய சேஷ பக்தர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கம்.

**சூட்சும குரு :**

ஒவ்வொருவருடைய வாழ்விலும் அருளை அள்ளித் தரும் ஒரு சூட்சும குரு அமைந்துவிட்டால், அவர்களது வாழ்க்கையில் ஆனந்த வெள்ளம் கரை புரண்டு விடும். அதுவும் இந்த சூட்சும குரு மகான் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளாக அமைந்துவிட்டால் பிறகு கேட்கவும் வேண்டுமோ? அருள்மழை பொழியும்! கருணைக் கடல் விரியும்! வாழ்வின் துன்பங்கள் அனைத்தும் தொலைந்து இன்பங்கள் மட்டுமே வாழ்வில் சிறகடித்து பறக்கும்.

துயரங்கள் எப்போதெல்லாம் நம் வாழ்வின் முன்னே வந்து நிற்குமோ? அப்போதெல்லாம் சூட்சும குரு மகான் சேஷாத்ரி ஸ்வாமிகள் நம் துயரங்கள் துடைக்க ஏதோ ஒரு ரூபத்தில் எழுந்தருளி அபயக்கரம் நீட்டி நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றுவார்.

ஆனால் அதற்கு நாம் செய்ய வேண்டியது இடைவிடாத பிரார்த்தனையாகும்.

தளராமல், தன்னம்பிக்கை இழக்காமல் சூட்சும குருவை மனதில் நினைத்து போராடுவோமேயானால் எடுத்த முயற்சியிலும் எதிர் வைத்த அடியிலும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். தோல்வி என்பதே நம் அருகில் நெருங்காது.

அப்படிப்பட்ட அருள் தெய்வம், கருணைக்கடல், காக்கும் கரங்களாகிய சூட்சும குருவை நம் பதினெண் சித்தர் சக்தி பீடத்தில் வந்து வழிபட்டு வாழ்வில் வளம் பெறுவோம்.

**ஸ்தூல குரு :**

சூட்சும குரு மகான் சேஷாத்ரி ஸ்வாமிகளைப் பற்றி பார்த்தோம். இப்போது அந்த மகான், சூட்சுமகுருவாகிய சேஷாத்ரி ஸ்வாமிகளை நம் வாழ்வில் அறிமுகப்படுத்திய ஸ்தூல குரு உயர்திரு. குருஜி கே.வி.எல்.என். சர்மா அவர்களை இந்த நேரத்தில் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அல்லும் பகலும் அயராது பல வருடங்கள் சூட்சும குரு சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆணையை சிரமேற்கொண்டு இன்று நாமெல்லோரும் வந்து வழிபட்டு அருளை அள்ளிச் சென்று கொண்டிருக்கும் பதினெண் சித்தர் சக்தி பீடத்தை உருவாக்கியவர் குருஜி அவர்கள்.

நமது பிரச்சினைகளை நாம் அவரிடம் சொல்லும்போது குருஜி அவர்கள் கூறும் விளக்கங்களும், எப்படி வழிபட்டால் பிரச்சனைகள் தீரும் என்ற வழிமுறைகளும் நம் இன்னல்களை தீர்த்து வைக்கும்.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அவர் கூறும் பரிகாரங்களை செய்து பிரார்த்தனை முறையை கடைப்பிடிக்க வேண்டும்.

இன்னல்கள் இருட்டில் மறையும்!

துன்பங்கள் துடைத்தொழிக்கப்படும்.

ஆபத்துகள் அடியோடு நீங்கும்!

வாருங்கள்! பதினெண் சித்தர் சக்திபீடம் உங்களை வரவேற்க காத்திருக்கிறது.

சூட்சும குருவையும், ஸ்தூல குருவையும் வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்.

**மருதபரணி**

**புதிருக்கான விடைகள்**

**1. காது, 2. போகர், 3. கபிலர், 4. வள்ளலார்,**
**5. இடைக்காடர், 6. ஆனிலையப்பர், 7. நந்தவனத்தில்**

## மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் மகா ஆராதனை விழா

## டிசம்பர் 29, 30, 2018

கணபதி ஹோமம், கோ பூஜையுடன் தொடங்கி விசேஷ ஸ்ரீ நரசிம்மர் ஹோமம், ஸ்ரீ மகா சுதர்ஸன ஹோமமும் திருக்கல்யாண வைபவமும், பாதுகை பூஜையும் நடைபெற உள்ளது. அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு தாராளமாய் நன்கொடை அளித்து பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## சக்தி பீடத்தில்

### முக்கிய தினங்கள்

**அக்டோபர் 2018**

| | |
|---|---|
| 4 | குருபெயர்ச்சி துலா ராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு பிரவேசிக்கிறார் |
| 8 | ஸர்வ மஹாளய அமாவாசை, ஹஸ்தம் |
| 10 | நவராத்ரி பூஜா ஆரம்பம் |
| 18 | சரஸ்வதி பூஜை |
| 24 | பௌர்ணமி |

**நவம்பர் 2018**

| | |
|---|---|
| 5 | ஹஸ்தம் |
| 6 | தீபாவளி பண்டிகை |
| 7 | அமாவாசை |
| 13 | கந்த சஷ்டி |
| 22 | பௌர்ணமி, கார்த்திகை தீபம் |

**டிசம்பர் 2018**

| | |
|---|---|
| 2 | ஹஸ்தம் |
| 6 | அமாவாசை |
| 18 | வைகுண்ட ஏகாதசி |
| 22 | பௌணர்மி |
| 23 | ஆருத்ரா தரிசனம் |
| 29,30 | மகான் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் மஹா ஆராதனை விழா |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
**அமைந்துள்ளது.**

**முகவரி எண். 1, சன்னதி தெரு,**
**மாடம்பாக்கம், சென்னை - 600 126.**
**போன் : 044-22281408, 22280407,**
**29710972, 8754486723**
**பாலாலயம் : 2228 1337**
**பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K**
**தி.நகரிலிருந்து 5A Cut Service**
**குரோம்பேட்டையிலிருந்து S3, S10 மினி பஸ்**
**இறங்குமிடம் : சிவன் கோயில்**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**அன்பார்ந்த**
**சேஷ ஒளி வாசகர்களே**




மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

# ராசி பலன்கள்

# அக்டோபர் - டிசம்பர் 2018

## அனைவருக்கும் குருப்பெயர்ச்சி சுபபலன்களை தர நல்லாசிகள்

## மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)



**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 10ஆம் சஞ்சரிக்கிறார். உச்சம் அடைந்துள்ளார். கேது கிரகத்தோடு சஞ்சரிக்கிறார். ஆரம்பத்தில் குருபலம் இருப்பதால் திருமணத்தடை அகலும். காதல் கைக்கூடும். அக்டோபர் 5 ஆம் தேதி முதல் எல்லா விதத்திலும் கவனம் தேவை. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கடல் வாணிபம் ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு திடீர் பணவரவு ஏற்படும். மாணவர்கள் கல்விதுறையில் முன்னேறுவார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் கூடும். அரசியல்வாதிகளுக்கு பதவி இறக்கம் உண்டு. பொதுவாக பொருளாதார விஷயத்தில் கவனமாக இருந்தால் இந்த மாதம் சுமரான மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். சுபசெலவுகள் ஏற்படும். மாத பிற்பகுதியில் பொருளாதாரத்தில் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். காதலில் சிறுசிறு கஷ்டங்கள் ஏற்படும். கலைஞர்கள் லாகிரி வஸ்துகளை தவிர்க்கவும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. பணியாளர்கள் பதவி மாற்றத்துக்கு முயற்சிக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அ.எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய சித்தர் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், ஞாயிறு, ராகுகாலம். வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்ர மகாமேரு, ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாபம் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சந்திர மங்கள யோகம் ஏற்பட்டுள்ளது. புதுமனை வீடு வாங்கும் யோகம் உண்டு. திருமணத் தடை நீங்கும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் மாத பிற்பகுதியில் ஓரளவு லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு மனமகிழச்சியான சூழ்நிலை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அ.எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதும்பை சித்தர், சனிக்கிழமை. வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். குருபெயர்ச்சி அனுகூல பலன்களை தரப்போகிறது. திருமணத்தடை அகலும். காதல் கைக்கூடும். கணவன் மனைவி உறவு மேம்படும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். புதுமனை வீடு வாங்கும் யோகம் உண்டு. கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்களுக்கு எதிர்பாராத மதிப்பெண் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக லாபம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சிறப்பான மாதமாகவே அமையும். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும்.

அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகா சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபெயர்ச்சி அனுகூலமான பலன்களை தரும். உடல்நலத்தில் கவனம் தேவை. காதல் திருமணத்தில் சிறு சிரு சிக்கல்கள் ஏற்பட்டு விலகும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. எச்சரிக்கை. மாணவர்கள் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். விவசாயிகள் நூதன முறைகளை கையாளுவார்கள். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சிவவாக்கிய சித்தர், கையிலாய கம்பளி சட்டைமுனி சித்தானி திங்கட்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்ர மகாமேரு, பௌணர்மி. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். குருபலம் இருப்பதால் எதிலும் எங்கும் வெற்றி கிடைக்கும். திருமண தடை நீங்கும். காதல் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய தொழில் ஆதாயம் கொடுக்கும். மாணவர்களுக்கு அதிக பாராட்டுகள் குவியும். விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு மனைவி வழியில் சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## மிதுனம்

(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)



**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. குருபகவான் ரோக ஸ்தானத்தில் வருவதால் மருத்துவ செலவுகள் ஏற்படும். இருப்பினும் பார்வை பலத்தால் கவலை வேண்டாம். சிறு சிறு தடைகள் திருமணத்தில் ஏற்பட்டாலும் அனுகூலம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். எச்சரிக்கை! சின்னதிரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு விபத்துகளுக்கு இடமுண்டு. பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். மனதில் சிறு சிறு சலனம் ஏற்பட்டு விலகும். பேச்சில் கவனம் தேவை. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். தெய்வ பலம் கூடும். திருமணத் தடை அகலும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. சின்னதிரை கலைஞர்களுக்கு அதிக லாபம் உண்டு. மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள் கடன் வாங்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் இடையூறு ஏற்படும். பணியாளர்களுக்கு சகல ஊழியர்களால் தொல்லை ஏற்படும். எச்சரிக்கை. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், ஞாயிறு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்ர மகாமேரு, ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் குருவுடன் சம்பந்தப்பட்டுள்ளார். மனதில் தெளிவு ஏற்படும். திருமண விஷயத்தில் அவசர பட வேண்டாம். கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். வியாபாரிகள, தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். கலைஞர்களுக்கு வாகன யோகம் உண்டு. ஆராய்ச்சி படிப்பு படிக்கும் மாணவர்கள் வெற்றி அடைவார்கள். விவசாயிகள் புதிய கடன் வாங்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. எச்சரிக்கை! பணியாளர்களுக்கு சக ஊழியர்களால் மனகசப்பு ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, ராகுகாலம், ஸ்ரீ சக்ர மகாமேரு, வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## கடகம்

(பூனர்பூசம் 4ம் பாதம்,



**அக்டோபர்**

ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குருபெயர்ச்சி ஆதாயத்தை தரும். காதல் கைக்கூடும். திருமணம் நடக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு சுற்றுலா செல்லும் யோகம் உண்டு. மாணவர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். விவசாயிகள் கடன் தொல்லையிலிருந்து விடுதலை அடைவார்கள். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். மேல் அதிகாரிகளால் பணியாளர்களுக்கு ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்ர மகாமேரு, வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். இருப்பினும் ராகுவுடன் சம்பந்தப்பட்டுள்ளார். சிறு சிறு சலனங்கள் மனதில் ஏற்பட்டு விலகும். கணவன் மனைவி உறவு அன்னியோகமாக இருக்கும். காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெருத்த லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு நல்ல ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு மான்யம் கிடைக்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வாக்கு வெண்மை கூடும். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்கள் உணர்ச்சிவசப்பட கூடாது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பணவரவு உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய், வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

குருஜி கே.வி.எல்.என். சர்மா

## சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபெயர்ச்சி மனநிம்மதியை தரும். காதல் - திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு கௌரவ பதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு விளைச்சல் கூடும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம் ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சுந்தர கணபதி - சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். இருந்தாலும் குருபலம் கூடியுள்ளது. மனதில் திடீர் பயம் ஏற்பட்டு விலகும். திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு வங்கிகளால் லாபம் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். விவசாயிகளுக்கு சகோதர சகோதரிகளால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு சொத்து பிரச்சினை ஏற்படும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய், வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய். சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். புத்திசாலிதனம் கூடும். வீட்டில் அமைதி நிலவும். கணவன் மனைவிஉறவு திருப்திகரமாக இருக்கும். தடைப்பட்ட திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். மாணவர்களுக்கு திடீர் நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பணியாளர்கள் பொருளாதாரத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுவாக இந்த மாத பெரும் பகுதி நல்ல பலன்களே நடைபெறும்.

அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டை முனி சித்தர், குதும்பை சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். 3ம் இடத்தில் குரு வருவதால் எதிலும் எச்சரிக்கை தேவை. தெய்வ பலம் கைக் கொடுக்கும். கணவன் மனைவி உறவு சுமராக இருக்கும். காதலில் சிறு சிறு தடைகள் உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பொருளாதாரத்தில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு திடீர் தொழில் முடக்கம் ஏற்படும். மாணவர்கள் கவனத்தோடு இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு மனஅழுத்தம் ஏற்படலாம். சில அரசியல்வாதிகள் தண்டிக்கப்படுவார்கள். பணியாளர்க புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அர்த்தாஷ்டம சனி உள்ளது. பிரயாணத்தின்போது கவனம் தேவை. குடும்பத்தில் பணபிரச்சினை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். சின்னதிரை கலைஞர்களுக்கு திடீர் திருப்பம் ஏற்படும். தொழில்நுட்ப படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவு உண்டு. குழந்தைகளால் அரசியல்வாதிகளுக்கு தொல்லை உண்டு. பணியாளர்கள் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். பரிகாரம் தேவை.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அர்த்தாஷ்டம சனியின் பாதிப்பு உண்டு. எங்கும் எதிலும் நிதானம் தேவை. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கவனமாக இருக்கவேண்டும். கலைஞர்களுக்கு பொருளாதாரத்தில் நெருக்கடி ஏற்படும். மாணவர்களுக்கு மனஅழுத்தம் உண்டு. விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்கவும். அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் தண்டனை உண்டு. பணியாளர்கள் வீண்வாக்குவாதம் செய்ய வேண்டாம். பொதுவாக பரிகாரம் செய்தால் ஓரளவு நல்ல பலன்களே அடையலாம்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, ராகுகாலம், ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**அதடோபர்**

ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். நினைத்தது நிறைவேறும். குருபெயர்ச்சி சுப பலன்களை கூட்டும். புது புது பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. காதல் - திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு திடீர் பிரயாணத்தால் ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு மனமகிழ்ச்சி தரும் சூழ்நிலை ஏற்படும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய், ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய். சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். குருபலம் கூடிவிட்டது. காதல் திருமணம் கைக்கூடும். நினைத்த கார்யம் நிறைவேறும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அரசாங்கத்தால் லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பிரயாணத்தால் லாபம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் மிக நல்ல மாதமாகவே இருக்கும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், வெள்ளி, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். குருபலம் கூடியுள்ளது. காதல் - திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வங்கி உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் மனமகிழ்ச்சிகரமான மாதமாகவே இருக்கும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதும்பை சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். ஜென்ம குரு இருப்பதால் மனகுழப்பம் ஏற்படும். பொருளாதார தடை ஏற்படும். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. எங்கும் எதிலும் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு உண்டு. மாணவர்கள் மனஅழுத்தத்திற்கு இடம் தரவேண்டாம். விவசாயிகளுக்கு கடன் தொல்லை ஏற்படும். அரசியல்வாதிகள் தண்டிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு குழப்பமான சூழ்நிலை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். கவனம் தேவை. பரிகாரம் தேவை.

அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய். சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை மற்றும் 28 தேதி முதல் 30ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**நவம்பர்**

ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. மனதில் சிறு சிறு சலனங்கள் ஏற்படும். பணம் களவு போகும். எச்சரிக்கை. பிடிவாத குணத்தை விடுவது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். கலைஞர்களுக்கு புதிய முயற்சி வெற்றி தரும். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. விவசாயிகளுக்கு பெண்களால் தொல்லை உண்டு. அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் குழப்பம் ஏற்படும். பணியாளர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பரிகாரம் செய்தால் இந்த மாதம் ஓரளவு நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**டிசம்பர்**

ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்ம குருவும் ஏழரை சனியும் தாக்குகிறது. எதிலும் எங்கும் எச்சரிக்கை தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். எச்சரிக்கை. கலைஞர்களுக்கு மருத்துவ செலவு உண்டு. மாணவர்கள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். விவசாயிகள் அவரச முடிவுகள் எடுக்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு பிரயாணத்தின்போது சிறு சிறு விபத்துகள் ஏற்படும். பணியாளர்களுக்கு மாத பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். பரிகாரம் செய்தால் பலன் கூட்டும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



### அக்டோபர்

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபெயர்ச்சியால் சுபநிகழ்வுகள் உண்டு. காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு சொத்து வாங்கும் யோகம் உண்டு. கலைஞர்களுக்கு இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேறுவார்கள். விவசாயிகளுக்கு புதிய நிலம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் ஆடம்பர செலவுகள் செய்வார்கள். பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிகிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை, மற்றும் 30ம் தேதி முதல் நவம்பர் 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

ராசிநாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் தாக்கம் உள்ளது. பிரயாணத்தின் போது கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் புதிய நிலம் வாங்குவார்கள். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. பணியாளர்களுக்கு வீட்டில் சுபசெலவுகள் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. சுபகாரியம் நடக்கும். சில அன்பர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். கணவன் மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். திருமணத்தடை அகலும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சுபசெலவுகள் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். ஆசிரியர்களால் மாணவர்களுக்கு பாராட்டு கிடைக்கும். விவசாயிகளுக்கு வாகனம் வாங்கும். யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு ஆன்மீக பயணம் உண்டு. பணியாளர்களுக்கு புதுமனை வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

### அக்டோபர்

ராசிநாதன் விரையம் அடைந்துள்ளார். ஏழரை சனி நடக்கிறது. பிரயாணத்தின்போது கவனம் தேவை. குருபெயர்ச்சி சுபபலன்களை தரும். காதல் திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு மேம்படும். வீட்டிற்காக சுபசெலவு ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு புதிய நல்ல தகவல் கிடைக்கும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு திடீர் பதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத நன்மை கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

ராசிநாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் தாக்கம் உண்டு. குருபலம் கூடிவிட்டதால் கவலை வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெருத்த லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு கடல் பிரயாணத்தால் ஆதாயம் உணடு. மாணவர்களுக்கு புதிய நல்ல திருப்பம் ஏற்படும். விவசாயிகளுக்கு அரசாங்க மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகள் சொத்து பிரச்சனையில் ஈடுபட வேண்டாம். பணியாளர்களுக்கு புதிய முயற்சி வெற்றி தரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3ம் தேதி வரை, 29ம் தேதி முதல் டிசம்பர் 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

ராசிநாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி நடக்கிறது. இருப்பினும் குருபலம் கூடியுள்ளது. காதல் கைக்கூடும். திருமண தடை அகலும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பூர்வீக சொத்து விவசாயிகளுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகள் சகோதர சகோதரிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

### அக்டோபர்

ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி பாதிப்பு உண்டு. குருபெயர்ச்சி சுமரான பலன்களை தரும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு தொழிலை மாற்ற நிலை வேண்டிய நிலை ஏற்படும். கலைஞர்களுக்கு தொழில் முடக்கம் உண்டு. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகள், தொழில் மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் தண்டனை கிடைக்கும். பணியாள்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. பொதுவாக இந்த மாதம் சிக்கலான மாதமாகவே அமையும். பரிகாரம் தேவை.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், வெள்ளிக்கிழமை, ராகு காலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் அமைப்பு சரியில்லை. எதிரிகளால் தொல்லை ஏற்படும். மூளை சலவை செய்வார்கள். எச்சரிக்கை. புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். காதல் விஷயத்தில் அவசரம் வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு தொழிலில் மாற்றம் ஏற்படும். கலைஞர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். ஆராய்ச்சி படிக்கும் மாணவர்களுக்கு லாபம் உண்டு. விவசாயிகளுக்கு கடன் தொல்லை உண்டு. அரசியல்வாதிகளுக்கு பதவி இறக்கம் உண்டு. பணியாளர்கள் வழக்கம் போல் பணிகளை செய்யவும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணா மூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 10ல் குரு இருப்பது அவ்வளவு நல்லதல்ல. பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் நிதானத்தை கடைபிடிக்கவும். கலைஞர்களுக்கு பதவி மாற்றம் ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகள் பணவிஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். விவசாயிகள் பணவிஷயத்தில் கவனமாக இருக்க வேணடும். அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் குழப்பம் ஏற்படும். பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணா மூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை, 28ம் தேதி முதல் ஜனவரி 3ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## மீனம்

(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)



### அதடோபர்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபெயர்ச்சி சுபபலன் கொடுக்கும். ஆன்மீக பயணம் ஏற்படும். மகான்காளின் அருள் கிடைக்கும். கணவன் மனைவி உறவில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு விலகும். திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக கவனத்துடன் இருந்தால் அதிக லாபம் அடையலாம். சின்னதிரை கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு ஆசிரியர்களிடம் பாராட்டு கிடைக்கும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு ஆன்மீகவாதிகளால் லாபம் உண்டு. பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் அனுகூலம் உண்டு. மகான்களின் ஆசி உண்டு. வீட்டில் அமைதி உண்டு. கணவன் மனைவி உறவில் முன்னேற்றம் உண்டு. காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஆன்மீக பயணம் மேற்கொள்வார்கள். கலைஞர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்களுக்கு மதிப்பெண் கூடும். விவசாயிகளுக்கு தந்தை வழி சொத்து கிடைக்கும். அரசியல்வாதிகள் ஆன்மீகத்தில் ஈடுபடுவார்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், வெள்ளி, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.


### டிசம்பர்

ராசிநாதன் பாக்கியம் அடைந்துள்ளார். தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாகும். காதல் கைக்கூடும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு மகான்கள் வழிகாட்டுதல் கிடைக்கும். சின்னதிரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு தந்தை வழி சொத்து கிடைக்கும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிறு, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை மற்றும் 30ம் தேதி ஜனவரி 2ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# நவராத்ரி

நவராத்ரி வழிபாடு பெண்களுக்கே உரியது. இப்பண்டிகையால்பெண்கள் பெறுவது, திருமணப் பயனாகும்.



சுமங்கலிகள் பெறுவது, மாங்கல்யப் பலனாகும். மூத்த சுமங்கலிகள் பெறுவது மனமகிழ்ச்சியும், மனநிறைவும் ஆகும். பெண் குழந்தைகள் கற்றுக் கொள்வது பாரம்பரியப் பண்பாகும். இந்நாட்களில் குதூகலமும், பரிபூரண திருப்தியும், மனதில் இழையோடிக் கொண்டிருக்கும். புரட்டாசி மாத வளர்பிறைப் பிரதமையில் துவங்கி விஜயதசமியில், நவராத்ரி நிறைவடைகிறது. முதல் மூன்று நாட்கள் துர்கையின் அம்சமாக, இடை மூன்று நாட்கள் லக்ஷ்மியின் அம்சமாக,கடை மூன்று நாட்கள் சரஸ்வதியின் அம்சமாக, அன்னை பராசக்தி பிரதிபலிக்கிறாள்.

துர்க்கை : இவள் வீரத்தின் தெய்வம் நெருப்பின் ஆவேசப் பார்வை கொண்டவள். தீயசக்திகள் எவற்றையும், தன்னை வணங்குபவர்களை நெருங்க விடாமல் தடுத்து, அரணாகக் காத்து, பாதுகாப்பு தரும் அற்புத சக்தி படைத்த சர்வேஸ்வரியாவள்.

லக்ஷ்மி : இவள் பொன்னிற ஆடையுடன் அமுதத்தில் உதித்தவள் இத்தேவி கமலத்தில் வீற்றிருக்கிறாள். வறுமையை அடியோடு அகற்றி, வற்றாத செல்வ வளங்களை வாரி வழங்கும் வரலக்ஷ்மியாக அருள்பாலிக்கிறாள்.

சரஸ்வதி : இவள் அமைதிப் பார்வையுடன் ஞானசக்தியின் ரூபமாக வெண்தாமரையில் மிளிர்கிறாள். புலமை, தொழில், ஞானம் மற்றும் ஆதார சக்தியாக விளங்குபவள். சரஸ்வதியின் பூரணமான அருள் மலரும் விஜயதசமியில் துவங்கும் எந்த ஒரு செயலும், வெற்றியையே தரும் என்பது ஆன்றோர்கள் வாக்காகும்.

குழந்தைகளின் ஆரம்பக் கல்வியை பெரியவர்கள் இத்தகைய சிறப்பு வாய்ந்த நந்நாளிலேயே துவங்குவார்கள். சிலரது இல்லங்களில் இந்நவராத்ரியின் ஒன்பது நாட்களிலும் தேவி மஹாத்மியம் பாராயணம் செய்வார்கள். இந்நாட்களில் மனமுருக நாம் கூறும் அம்பிகையின் ஸ்லோகங்களும், துதிப்பாடல்களும், வியத்தகு அற்புதப் பலன்களை நம் வாழ்க்கையில் அள்ளித் தரும்.

மேன்மை மிகுந்த இந்நவராத்ரி நாட்களின் மாலை நேரங்களில் நம் பதினென் சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தில் அருள்சக்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரியின் மூலசன்னதி முன்பு, மனமுருகி வேண்டி, பிரார்த்தனை செய்து, அம்பிகையை வலம் வந்து துதி செய்தால், எண்ணிய நல்லெண்ணமெல்லாம் ஈடேறும் என்பது திண்ணம்.


- திருமதி உமாபரணி



மும்பை புரவலர்
திருமதி வைதேகி –
திரு. அனந்தகிருஷ்ணன்
அவர்களின் மகன் திருமணம்
ஹரிஹரன் – மல்லிகா
உடன்
சென்னை புரவலர்கள்

## புதிர் போட்டி

வினாக்களுக்கு ஏற்ற விடையை கட்டங்கள் நிரப்புக.



வினாக்கள்:

1........அறுந்த ஊசியும் வாராது காணும் கடை விழிக்கே

2. பழனி முருகன் சிலையை உருவாக்கியவர்......சித்தர்

3. மாடம்பாக்கத்தில் பசு மாடாக அவதரித்தவர்....

4. "கடை விரித்தோம் கொள்வாரில்லை" என்று கூறியவர்...... சித்தர்.

5. கருவூரார் சித்தர் சித்தியடைந்த கோவில்......

6. .....ஓர் ஆண்டி அவன் நாலாறு தமாய் குயவனை வேண்டி"


திருமதி ஜெயந்தி முரளி

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

இலவச மருத்துவமனை
செயல்படுகிறது.

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் நடைபெறுகிறது. வடை பாயசத்துடன் அன்னதானம் ரூ. 2500/- நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்



# சக்திபீடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்



கிருஷ்ண ஜெயந்தியன்று
கிருஷ்ணரை
அலங்கரித்திருக்கும் காட்சி



விநாயகர் சதுர்த்தியன்று
சுந்தர கணபதியை
அலங்கரித்திருக்கும் காட்சி



வரலக்ஷ்மி நோன்பு அன்று
அரூப மகாலக்ஷ்மி
அலங்கரித்திருக்கும் காட்சி



ஆடிபூரத்தன்று சுவாசினிகள் லலிதா நமஸ்காரம்பாராயணம் செய்யும் காட்சி



விநாயகர் ஊர்வலம்

## திரு. ரவிசங்கர் - திருமதி மீரா அவர்களின் அகவை அறுபது குருஜி அவர்களின் வாழ்த்து



குருவருளும் திருவருளும் துணையிருக்கும்
குருவாயூரப்பன் உன் உள்ளத்தில் குடியிருக்க
குருவிற்கே குருவாய் சேஷகுரு யிருக்க
குல தெய்வம் கோபாலன் குழல் ஊதி வாழ்த்த
விண்ணைத் தொட்ட விண்மீன்கள் வாழ்த்து பலசொல்லும்
விண்ணுலக தேவதைகள் தேவ கீதம் பாடும்
வண்ண வண்ண மலர்கள் வாழ்த்துக்களை வழங்கும்
வானவில் போன்று வாழ்க்கை வண்ணமாய் மிளிரும்
கண்ணனை மயக்கினாள் மீரா பாடலினால்
மீராவையே மயக்கினாய் உன்எழில் மேனியினால்
மின்னொளி போன்று அறிவொளியாம் மீரா
உள்ளொளியாம் உன்னுடன் என்றும் இருப்பாளே!
அகவை அறுபது அதிகம் இல்லை உனக்கு
அன்பில் பிரியாள் அறிவொளி மீராவோடு
ஆயிரம் பிறை காண்பாய் அருளாசியோடு
ஆலமுண்ட கண்டன் ஆயுளைக் கொடுப்பானே!
அகண்ட காட்டை அழித்து சக்திபீடம் கண்டாய்
அதையே ஆடையாய் அணிந்து மகிழ்ந்தாயே!
அகண்ட காட்டை அழித்து சக்திபீடம் கண்டாய்
அதையே ஆடையாய் அணிந்து மகிழ்ந்தாயே
அண்டத்தையே ஆட்டும் பதினெண் சித்தர்கள் வாழ்த்த
அரவணைத்து வாழ்த்துகிறேன் வாழிநீ பல்லாண்டு
வாழி நீ பல்லாண்டு! வாழி நீ பல்லாண்டு!

குருஜி சர்மா திருமதி ராதாசர்மாவின்
அருளாசிகள்

SRI SESHA OLI - R.Dis . No. 795/2006

# பக்தர்களைக் கேட்டும் பெறுவார்கள் ஞானிகள்

முக்காலமும் அறிந்தவர்கள் ஞானிகள் அருகில் நிகழ இருப்பதையும், தொலைவில் நிகழ்வதையும், நிகழ்ந்ததையும் தங்களின் ஞான திருஷ்டியால் கண்டு கூறக்கூடிய ஆற்றல் உடையவர்கள் மகான்கள். பிறர் உள்ளம் நினைப்பதை அவர் கூறாமலே கூறுபவர்கள் மறந்ததை ஞாபகப் படுத்துவார்கள். அவர்கள் என்றோ நடந்ததை நடக்கப் போவதை தெரிவிக்கின்ற பேராற்றல் உடையவர்கள். தீர்க்க தரிசிகள் சர்வ வல்லமை படைத்தவர்கள்.

ஆம்! இதோ தார்கட்டின் மகன் பாபாவைப் பார்க்க சீரடிக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறான். ஏதேனும் மகனிடம் பாபாவிற்காக கொடுத்தனுப்ப வேண்டும் என நினைத்தவள் முன்னமே நைவேத்திய மாக வைக்கப்பட்ட 'பேடா' மட்டுமே இருந்ததால் பெரும் பக்தியோடும் அன்போடும் அதனை கொடுத்தனுப்பினாள். அதனை பாபா ஏற்றுக் கொள்வார் என நம்பினாள்.

தார்கட்டின் மகன் கோவிந்த் பாபாவை காணச் சென்றான். கண்டான். வணங்கினான். ஆனால் உடன் 'பேடா'வை எடுத்துச் செல்லவில்லை. பாபா பொறுத்திருந்தார். மீண்டும் பாபாவைக் காண வெறுங்கையோடுச் சென்றான். பாபாவைக் கண்டான் வணங்கினான் ஒன்றும் தனக்குக் கொடுத்தாததைக் கண்ட பாபா என்ன கொண்டு வந்திருக்கிறாய்? என்று கேட்டார். ஒன்றுமில்லை பாபா என அவனிடம் இருந்து பதில்வர, பாபா உன் அம்மா உன்னிடம் நீ கிளம்பும்போது எனக்காக இனிப்புப் பலகாரம் கொடுக்கவில்லையா? எனக் கேட்டவுடனே கோவிந்திற்கு ஞாபம் வந்து வெட்கத்துடன் பாபாவிடம் மன்னிப்புக் கேட்டு தன் இருப்பிடம் ஓடிச் சென்று அப்'பேடா'வை கொண்டு வந்து பாபாவிடம் கொடுத்தான். பாபாவும் அதை பேராவலுடன் வாங்கி வாயிலிட்டுச் சுவைத்தார். ஆம் தார்கட்டின் பக்தி, நம்பிக்கை பாபாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன்றோ!

## குருநாதரின் அருள்

அன்று சந்திர கிரகணம் ஆதலால் எல்லோரும் இரவு பத்து மணிக்கு மேல் தான் உணவு உண்ணவேண்டும் என்பதால் யாரும் சேஷாத்ரி சுவாமிகளுக்கு உணவு கொண்டு வந்து தரவில்லை. எஸ். ஜெயராம் முதலியாரும் அவர் மனைவியும் நாமாவது ஏதாவது உண்ணக் கொடுப்போம் என்று பழங்களையும், பக்ஷணங்களையும் எடுத்துக் கொண்டு சுவாமிகளை தேடிச் சென்றனர்.

சடைச்சி வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த அவரைக் கண்டு ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அளித்தனர். ஆனால் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடன் இருந்த முதலியாரைப் பார்த்து திடீரென்று எனக்கு ''சாதம், ரசம், பருப்பு துவையல்'' கொண்டு வருவாயா? என்று சுவாமி கேட்டார்.

தன் மனைவியை பார்த்து ஜெயராம் முதலியார் சுவாமிகள் கேட்டதை தயார் செய் உடனே என்றார். அவரது வீட்டில் அதைத் தான் அவர்களுக்காக சமைத்திருக்கிறாள் என அறியாதவர் முதலியார். ஆனால் சுவாமிகள் எப்படி அறிந்தார். அவர்கள் வீட்டு இன்றைய சமையலை!

சடைச்சி அம்மாள் உனக்கு ''பழமும், பக்ஷணமும் வேண்டாம். துவையலை கேக்கறியா நீ'' என்று எண்ணியபடியே ஸ்வாமிகளைப் பார்த்து சிரித்தாள். ஆம்! அனைத்தையும் அறிந்தவர்கள் ஞானிகள் பக்தர்களின் பக்தியையும் நம்பிக்கையையும் ஏற்றுக் கொண்டு இரட்சிக்கின்ற கருணா மூர்த்திகள். கேட்ட வரத்தையும், கேளாமலேயே ஓடிச் சென்று அருளும் உள்ளத்தையும் உடைய கற்பக விருட்சங்களன்றோ! நம் மகான்கள்.

தனக்குத் தேவையானதை பக்தர்களிடம் கேட்டு வாங்கி ஆனந்தப் படுகின்ற அற்புத மகான்களன்றோ இவர்கள்! தன் பக்தை கொடுத்தனுப்பிய இனிப்பை கேட்டுப் பெற்ற சீரடி பாபாவும் தன் பக்தனிடம் தனக்குத் தேவையானதை அவர்கள் வீட்டில் சமைக்கப் பெற்ற உணவையே கேட்டு உண்ட சேஷாத்ரி சுவாமிகளும் உள்ளன்புடன் வணங்கும் பக்தர்களின் அன்பில் திளைப்பவர்கள் அவர்கள் தருவதை தட்டாமல் பெற்றுக் கொள்பவர்கள். தங்களுக்கு வேண்டியதை கேட்டும் பெற்றுக் கொள்பவர்களன்றோ!

திருமதி ஜெயந்தி முரளி

## மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அருள்

மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அருளால் இரண்டு வருடத்திற்கு முன்பு ஜனவரி மாதம் குருஜியை நமஸ்கரித்து விட்டு எனது நாத்தனாரின் மகளுக்கு வரன் பார்த்துக் கொண்டிருக்கிறேன் அமையவே மாட்டேன்கிறது என்று கவலையுடன் கூறினேன்.

அதற்கு அவர் நாளை நமது (மாடம்பாக்கம் சித்தர் கோவில்) கோவிலில் காமேஸ்வரனுக்கும் காமேஸ்வரிக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது. நீ ஒரு ஜோடி பருப்புத் தேங்காய் கொண்டு வந்து வை எல்லாம் மகான் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் பார்த்துப்பார் என்றார். நானும் மறுநாள் திருக்கல்யாணம் நடக்கும்போது கொண்டு வந்த பருப்புத் தேங்காயை வைத்தேன்.

அடுத்த ஆண்டு காமேஸ்வரன், காமேஸ்வரி திருக்கல்யாணத்திற்கு வந்தபோது என் நாத்தனாரின் மகளுக்கு திருமணம் நிச்சயமாகியுள்ளதை கூறி குருஜி அவர்களை நமஸ்கரித்தேன். எல்லாம் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆசியும், உன் பரிபூரண நம்பிக்கையோடு செய்த பக்தியும் தான் காரணம் என்று கூறி ஆசி வழங்கினார்.

ஆம்! மகானின் தங்கக்கை வாரி வழங்கக் கூடியது. நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்வோம்! அவர் அருளால் அவர் அருளைப் பெறுவோம்!

''ஸ்ரீ சேஷாத்ரி சுவாமியே போற்றி போற்றி!''


**ஸ்ரீ சேஷ ஒளி**

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

வெளியீட்டாளர்
**திரு. கே. ராமசுப்ரமணியன்**

உதவி ஆசிரியர்
**திருமதி. என். ஜானகி**

கௌரவ ஆசிரியர்கள்
**திரு. மருதபரணி**
**திருமதி. உமாபரணி**

வடிவமைப்பு
**திருமதி. பிரேமா**

பதிவு அலுவலகம் :
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## ட்ரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்


## ஸ்ரீ சேஷ ஒளி
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |


Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.